உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௨] பவ வருஷ கார்த்திகைமீ [பகுதி-௧.
Vol. XXXII. *November-December 1934.* No. 1.

உள்ளுறை.

பரிசோதனத்தொடர்:—	ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார்	௧-௮
கம்பராமாயண இன்கவித்திரட்டு:-	,, ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், B.A.	௯-௧௮
குடஞ்சுட்டு:—	,, நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்	௧௯-௨௪
கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்)	,, மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர்	65-80
குருகைமான்மியம்:-	T. K இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்	265-272
பெருந்தொகை முதற்குறிப்பகராதி:	ஸ்ரீமத். மு. இராகவையங்கார்.	III-X

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0

1934.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avergal, and published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௨] பவஹு கார்த்திகைமீ [பகுதி-௧.
Vol. XXXII. November-December 1934. No. 1.

பரிசோதனத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

செந்தமிழ் தொகுதி ௩௧-ல் ௨௭௨-ம் பக்கத்தொடர்ச்சி.

பரிசோதனம் 5. (கிளவியாக்கம் 42.) "ஒருபொருள் குறித்த வேறுபெயர்க்கிளவி தொழில்வேறு கிளப்பி னொன்றிடனிலவே" என்பது சூத்திரம். இதன் பொருள், 'ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன்' என்பதுபோல ஒரு பொருளைக்குறித்து வேறு வேறு பெயர் வருமாயின் இடையே வேறுவேறாகத் தொழில் கொடுப்பின் அதற்கு ஒன்றுதலின்று; அப்பெயரெல்லாஞ் சொல்லிய பின்னைத் தொழில்கொடுப்பின் ஒன்றும்: என்பதாம். 'ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்' என்பது இதற்கு உதாரணம்.

மற்று, 'எந்தைவருக எம்பெருமான்வருக மைந்தன்வ்ருக' எனப் பெயர்தோறும் தொழில்கொடுப்பதும் ஒரோவழி ஒருபொருட்கு ஒன்றுமாகையால், அதனை இங்கு 'ஞாபகங்கூறல்' என்னும் உத்திவகையான் உரையாசிரியர் அமைத்தனர். "தொழில்வேறுகிளப்பின்" என்பதிலுள்ள 'வேறு' என்னுஞ்சொல்லே அதற்கு ஞாபகமென்பது அவர் கருத்து. சூத்திரத்தில் 'வேறுகிளப்பின்' என்றது, பெயர்தோறும் வெவ்வேறுதொழில் கொடுப்பதையே முழுவதும் ஆகாதெனவிலக்கி, 'எந்தைவருக எம்பெருமான்வருக' என்பதிற்போலப் பெயர்தோறும் ஒருதொழிலே கொடுப்பதை ஒருவாற்றான் ஆகுமென அந்த ஞாபகம் தழுவிக்கொள்ளவல்லதென்பதை அவர் நன்கு விளக்கியுள்ளார். அங்ஙனம் விளக்கும் வாக்கியங்கள் அச்சுப்புத்தகத்திற் சிறிது பிழையுடன் காணப்படுகின்றன.

*

"தொழில்வேறுகிளத்தலுன் இருவகைப்படும். பெயர்தோறும் ஒருதொழில் கிளத்தலும் வேறுகிளத்தலுமாம். பெயர்தொறும் வேறுய்த் தொழில்கிளத்தலும் வேறுகிளத்தலாம். அதனல் இச்சூத்திரத்துப் பெயர்தொறும் வேறுய்த்தொழில்கிளத்தலைத் 'தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடனில' என்றது": என்னும் இவ்வுரைப்பகுதியில் "வேறு கிளத்தலுமாம்" என்பது பொருளுணர்ச்சியை இடர்ப்படுத்துகின்றது. அதனை "வேறுகிளத்தலாம்" என்று திருத்திக்கொண்டால் பொருள் மிகத்தெளிவாய் விளங்கும்.

இவ்வாறே மேலும், அவ்வுரையின் அடுத்தபத்தியில், "அங்ஙனம் ஞாபகத்தாற் கொள்வதனையும் ஒருபொருட்கு ஒன்றுமென்று" என முற்றுப்பெறுது எஞ்சிநிற்கும் வாக்கியப்பகுதியை, "ஒன்றுமென்பது." என முற்றுவித்துக்கொண்டால் ஒருவாறு பொருள் பொருத்தமுறுகின்றது. ஆகையால் அதுவும் அங்ஙனம் திருத்திக்கொள்ளத் தக்கதே.

பரிசோதனம் 6. (கிளவியாக்கம் 55) "வினைவேறுபடாப் பல பொருளொருசொல் நினையுங்காலைக் கிளந்தாங்கியலும்" என்பது சூத்திரம். இத னுரைத்தொடக்கத்தில், "வினைவேறபடாப் பல்பொருள் ஆமாறு உணர்த்துதல் றுதலிற்று:" என்று அச்சுப்புத்தகத்திற் காணப்படும் வாக்கியம் பழையபிரதியில் இல்லை. அது, "பலபொருளொரு சொல் ஆமாறு" என்றிருப்பின் பொருந்தும். இவ்வாறே 53-ம் சூத்திரத்தின் அவதாரிகையிலும், 'பல்பொருள்' என்றிருப்பதை 'பலபொரு ளொருசொல்' என்று திருத்துதல் நன்று. இஃது ஒருபுறம் நிற்க.

'மாவீழ்ந்தது' என்றாற்போல, வினையினல்வேறுபட்டுப்பொரு ளறியப்படாத பலபொருளொருசொல்லை, ஆராயுமிடத்து, அஃது இன்ன தென்று அறியக் கிளந்தே சொல்லுக; என்பது இச்சூத்திரத்தின் பொருள். கிளந்துசொல்வதற்கு உதாரணம் 'ஆன்கன்று நீரூட்டுக' எனவரும். சூத்திரத்தில் 'நினையுங்காலை' என்றது, ஆராயுமிடத்து என்றவாறு. ஆராயுமிடத்துக் கிளந்துகூறுக எனவே, ஆராய்ச்சியில்லாத விடத்தாயிற் கிளவாதே கூற அமையும் என்பது உரையாசிரியர் கருத்து.

இக்கருத்தினை மேலும் விரித்துரைக்கின்றபகுதி அச்சுப்பிரதியிற் பிழைபாடுடையதாகப் பதிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி வருமாறு:—

"ஆராய்ச்சியுடைய நிலம் என்பது எருநிலம்; யாதோவெனின், 'கன்று நீரூட்டுக' என்றவிடத்து, ஆன்கன்றும், எருமைக்கன்றும் பூங்கன்றும் எனப் பலவும் ஆங்கு உளவாயின், அவன் சொன்ன கன்று நிற்பப் பிறிதொரு கன்று நீரூட்டல் வழுவாம். அதனான், இன்னுழி இன்னகன்று என்று கிளந்து சொல்லுக; அல்லாக்கால் இன்னகன்று என்று கிளவாதே சொல்ல அமையும்:" என்பதாம்.

இவ்வுரையுள் (எருநிலம்) என்ற சொற்றொடர் எவ்வாற்றானும் இயைபுடைத்தன்று. ஆகையால் அது வழுவியிருக்க வேண்டுமென்பது வெளிப்படை. ஆயினும், 'தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பு' எனும் புத்தகத்தில் அதனையே பொருத்தியமைக்க ஒரு வழி காட்டப்பட்டது:—"ஆராய்ச்சியுடைய நிலம் என்பது எருநிலம் என்ற சொற்றொடர் பொருளியைபின்றி நிற்கின்றது. அவ்வாறன்றி 'யாதோவெனின்' என்றதன் பின்னரும் 'கன்று நீரூட்டுக' என்றதன் முன்னரும் 'நிலம்செல்க என்றவிடத்து விளைநிலமும் எருநிலமும் ஆங்கு உளவாயின், அவன்சொன்ன நிலம் நிற்பப் பிறிதொரு நிலஞ் செல்லுதல் வழுவாம்; அதனான் இன்ன நிலமென்று கிளந்து சொல்லுக; அல்லாக்கால் இன்ன நிலமென்று கிளவாதே சொல்ல அமையும்; ஆராய்ச்சியுடைய நிலமென்பது எருநிலம்:' என்று இருப்பிற் பொருந்துமென்று தோன்றுகிறது" என்னும் இவ்வளவும் அப்புத்தகத்திற் கண்ட குறிப்பாகும். (பக்கம் 62)

இக்குறிப்பு அரிதின் ஆராய்ந்து உரைக்கப்பட்டதாயினும், இதனைத் திருத்தமென்று கொள்வது பொருத்தமின்றென்று தெரிகிறது. ஏனெனில், ஓர் உரைப்பகுதியின் பொருளுணர்ச்சிக்கு இன்றியமையாத பலவாக்கியங்கள், மூலச்சுவடியொன்றிலும் அடையாளமின்றி, முழுவதும் விழுந்தொழிந்தன என்றல் அத்துணை ஏற்புடைத்தன்று. அன்றியும், ஆராய்ச்சியுள்ளவிடத்துக் கிளந்து கூறவேண்டும், அல்லாக்காற் கிளவாதே கூற அமையும் என்பதைத் தக்க எடுத்துக்காட்டுடன் விளக்கப்புகுந்த உரையாசிரியர், 'நிலஞ்செல்க' என்பதுகொண்டு ஒருகால் அதனை நன்கு விளக்கினாராயின் மறித்தும் ஒருகால் 'கன்று நீரூட்டுக' என்பது கொண்டு முன்போலவே விளக்கவுரை வரைதல் 'பிஷ்டபேஷணம்' என்னுங் குற்றமாய் முடியும். இவையேயன்றி, இச்சூத்திரத்

திற்கு வாலாறுகாட்டியவிடத்து 'ஆன்கன்று நீரூட்டுக' என ஒன்றனையேகூறிவிடுத்தமையால்விரிவுரைவரையுமிடத்தும் அஃதொன்றனையே விளக்குவதல்லது, ஆண்டு (வினைநிலம் அல்லது) எருநிலம் சேறலைக் குறிப்பிடுதற்கு யாதோரியைபுமின்றாம். ஆகையால் இவ்வாறு பயனில் கூற்றும் மற்றொன்றுவிரித்தலுமான உரையினை இளம்பூரணர் எழுதியிராரென்பது திண்ணம்.

இனி, என்னிடமுள்ள பழையபிரதியைச் சோதிக்கநேர்ந்தபொழுது, 'எருநிலம்' என்ற அச்சுப்பிரதியின் பாடம் பிழையுடையதேயென்பது நன்கு விளங்கிற்று. அதில் "ஆராய்ச்சியுடையநிலம் என்பது வருநிலம் யாதோவெனின்; 'கன்று நீரூட்டுக' என்றவிடத்து, ஆன்கன்றும் எருமைக்கன்றும் பூங்கன்றும் எனப் பலவும் ஆங்கு உளவாயின், அவன் சொன்ன கன்று நிற்பப் பிறிதொரு கன்று நீரூட்ட வழுவாம்; அதனான் இன்னுழி இன்னகன்றென்று கிளந்து சொல்லுக, அல்லாக்கால் இன்ன கன்றென்று கிளவாதேசொல்ல அமையும்:" என்று மிகத்தெளிவாக வரையப்பட்டுள்ளது.

இங்கு 'ஆராய்ச்சியுடைய நிலம்' என்றது ஆராய்ச்சியுள்ள இடம் என்றவாறு. 'வருநிலம் யாதோவெனின்' என்றது (வருமிடம் அல்லது) வருமாறு யாதோவெனின் என்றவாறு. இடமென்னும் பொருளில் நிலமென்னுஞ்சொல்லை உரையாசிரியர் பிறவிடத்தும் வழங்கியுள்ளார். 62-ம் சூத்திரவுரையினிறுதியில், "அது நிலமாகத் தந்துரைத்து அவற்றையுங்கொள்க" என அவர் எழுதியிருப்பது இதனை வலியுறுத்தும். இனி, 'அல்லாக்கால்' என்றது ஆராய்ச்சியில்லாதவிடத்து என்றவாறு. பலபொருளொருசொல்லின் பொருள் கவர்த்தலில்லாதவிடம், ஆராய்ச்சியில்லாவிடம்; அது கவர்த்தற்குரியவிடம், ஆராய்ச்சியுள்ளவிடம்; ஆசிரியர் தொல்காப்பியர் "நினையுங்காலை" என விதந்தோதியதும் இதுவே: என்பது இளம்பூரணர் கொள்கை. இதுநிற்க.

"ஆராய்ச்சியுடைய நிலம் என்பது வருநிலம் யாதோவெனின்" என்புழி 'வருநிலம்' என்பது வேண்டாகூறலென்று சிலர் கருதலாம். இதற்கு முந்தியுள்ள வாக்கியமான, "ஆராய்ச்சியில்லாத விடத்தாயிற் கிளவாதே கூற அமையும் என்பதே அமையும்;" என்பதிலும் இது போன்ற குறைபாடு காணப்படும். ஆயினும் அவை பொருட்படுத்தற்குரி

யனவல்ல. மிக்க காலநீட்டத்தாற் பலமாறுதலுக்குட்பட்டு இன்றுகாறும் நின்று நிலவும் இவ்வுரைநடையிற் சொல்லமைதியைப் பெரிதும் சோதியாது, கருத்தமைதியையே கைக்கொள்ளவேண்டும்.

ஆகவே, இதுகாறுங் கூறியவற்றால் 'எரு நிலம்' என அச்சுப்பிரதியிற் கண்டபாடம் மூலப்பிரதியிலுள்ள 'வரு நிலம்' என்பதன் உருமாற்றமே என்று தெளிவாயிற்று. வகரவுயிர்மெய்யின் முற்பாதி வரிவடிவம் எகரவுயிரின் முழுவடிவத்தோடு ஒருபுடையொத்துத் தோன்றுமாகையால், பிற்பாதி உருத்தெரியாமலழிந்த நிலையில், பிரதிசெய்வோர்க்கு மயக்கமுண்டாகும். அக்காரணத்தால் இவ்வழு நேர்ந்திருக்கலாமென்று உய்த்துணரத்தக்கது.

பரிசோதனம் 7. (கிளவியாக்கம் 56) "குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி" என்பது சூத்திரம். ஒருபொருளைச் சொல்லக் கருதின், அதனை இற்றென்று தெரித்துச் சொல்லவேண்டும் என மரபு வழுக்காத்தல் இதன் பொருளாகும்.

இதன் வரலாற்றுப்பகுதி, "உலற்றற்றிற மின்றிப் பயின்றார் ஒரு சான்றார் மயிர்நீட்டி உலறிநின்றாரைக்கண்டு, ஒருவன், எம்பெருமான் உலறிநின்றீரால் என்றக்கால், வாளாதே உலறினேன் என்னற்க, இது காரணத்தான் உலறினேன் என்க:" என்று அச்சுப்புத்தகத்திற் பதிக்கப்பட்டுள்ளது. இங்கு 'உலற்றற்றிறம்' என்றிருப்பது பழையபிரதியில் 'உலறற்றிறம்' என்று திருத்தமாக விளங்குகின்றது. உலறிநின்றார், உலறிநின்றீர், உலறினேன் என்பனபோல இதுவும் உலறற்றிறம் என்றிருப்பதே சுத்தபாடமென்று கொள்ளத்தக்கது.

இதனுள், உலறுதல்—பொலிவழிதல். 'உலறற்றிறமின்றிப்பயின்றார் ஒருசான்றார் மயிர்நீட்டி உலறிநின்றாரைக் கண்டு' என்றது, முன்பு எஞ்ஞான்றும் பொலிவழிதலின்றிப் பழகினாராய்ப் பின்பு யாதுகாரணத்தினானோ உரோமம் வளர்ந்து பொலிவழிந்து நின்றாராகிய ஒரு சான்றாரைப் பிறனொருவன் கண்ணுற்று; என்றவாறு. 'ஒருவன்' என்றது, அப்பிறன் என்றவாறு. 'எம்பெருமான் உலறிநின்றீரால்' என்றது,

அவன் அதன்காரணத்தை வினவியறியும் வேட்கை யிருக்கும்படி காட்டியவாறு. 'வாளாதே உலறினேன் என்னற்க, இது காரணத்தான் உலறினேன் என்க' என்றது, பொலிவழிதற்காரணத்தைத் தெரித்து மொழியாது வெறுமனே, 'பொலிவழிந்தேன்' என்னற்க; இன்னகாரணத்தாற் பொலிவழிந்தேன் என்று அக் காரணந்தெரியச் சொல்லுக; என்றவாறு.

பரிசோதனம் 8. (கிளவியாக்கம் 57) "குடிமையாண்மையிளமை மூப்பே.........முன்னத்தினுணருங் கிளவியெல்லாம், உயர்திணைமருங் கினிலையினவாயினும், அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்:" என்பது சூத்திரம். இதன் பொருள்—குடிமைமுதல் விறற்சொல்லீறாயினவும் பிறவுமாகிய முன்னத்தினுணருங் கிளவிகள், உயர்திணைப்பொருளைப் பற்றுக்கோடாக நிகழ்தலின் உயர்திணைபோல் வழங்கவேண்டுமெனினும், அஃறிணையைச் சொல்லியாங்குச் சொல்லப்படும்—என்பதாம். உதாரணம்—அவர்க்குக்குடிமைநன்று, அவர்க்கு ஆண்மை நன்று; என வரும். பிறவும் அன்ன.

இங்குக் குடிமை குடிமையுடைய மக்கள்மேலும், ஆண்மை ஆண்மையுடையார்மேலும் நின்றன. ஆகலின் அவை உயர்திணையான் வழங்கல்வேண்டுமெனினும், 'நன்று' என அஃறிணைமுடிபு கொண்டன. இளமை, மூப்பு, அடிமைமுதலான ஏனைய குறிப்புமொழிகட்கும் இஃது ஒக்கும்.

இனி, இவ்வுதாரணங்களை எல்லாம் முறையாக எடுத்துக்காட்டிடத்து, 'வன்மை' என்பதற் கெதிராக "அரசுவன்மை நன்று" என அச்சுப்புத்தகத்திற் காணப்படுகிறது. என்னிடமுள்ள பழைய பிரதியில் அது காணப்படவில்லை. இச் சூத்திரவுரையிறுதியில், "வன்மை என்பது மூன்றுபாற்கும் பொதுவாய்நிற்பது யாண்டுப்பெறுதுமோ எனின் வழக்குப்பெற்றுழிக் கொள்க;" என்று எழுதியிருப்பதை நோக்குங்கால், பழையபிரதியிலுள்ளவாறு அவ்வுதாரணம் அங்குக் காட்டப்பெறு திருத்தல் பொருந்துமோ என்று சங்கிக்க இடமுண்டாகிறது. இஃது ஒருபுறம் நிற்க.

வன்மை யென்னும் வழக்கிற்கு இளம்பூரணர் வரலாறு காட்டினரே எனினும் அது, 'அரசுவன்மைநன்று' என்பதாகாது, 'அவர்க்கு வன்மைநன்று' என்பதாகல் வேண்டும். ஏனெனில், 'அரசு' என்னுஞ் சொல்லும் 'வன்மை' என்பதுபோல இச்சூத்திரத்து எடுத்தமொழிகளில் ஒன்ருய்த் தனியே வாலாறுகாட்டற்குரியதாகையால், இருமொழிகளையும் இணைத்து ஓர் உதாரணங்கூறுதல் மயங்கவைத்தலாய் வழுவும். அன்றியும் அவர்க்குக் குடிமை நன்று, அவர்க்கு ஆண்மை நன்று, அவர்க்கு இளமை நன்று, அவர்க்கு மூப்பு நன்று என்ருற்போல 'அவர்க்கு வன்மை நன்று' என்றலே, வன்மை யென்னுஞ்சொல் மூன்னத் தினுணருங் கிளவியாய் உயர்திணைமருங்கின் நிலைபெற்று அஃறிணை முடிபு கொண்டதைத் தெளிவாய் விளக்கவல்லது. அவர்க்கு உதவி புரியும் வன்மையாளர் நல்லர் என்பது இதன் பொருள். அரசுவன்மை நன்று' என்பதில் இப்பொருள் விளங்காது. ஆகையால் அதனை 'அவர்க்கு வன்மை நன்று' என்று இங்ஙனம் திருத்துதல் பொருத்தமுடையதே.

இன்னும் அவ்வச்சுப்புத்தகத்தில், "என்காதல் பொலிவாயிற்று; என்யானை வந்தது" என உதாரணங்கள் எடுத்துக்காட்டி, அவற்றின் பின், இவை முறையே காதலும் சிறப்பும் கெழீஇவந்தன:" என்று அச்சிடப்பட்டுள்ளது. 'கெழீஇவந்தன' என்பது இவ்வாக்கியத்திற்கு அத்துணைச் சிறந்தமுடிபாகத் தோன்றவில்லை. ஆகலின் அஃது இளம்பூரணர்எழுதியதுதானே என்பது ஐயப்படுதலுடைத்து. பழைய மூலப்பிரதியில் இங்ஙனங் காணப்படாமையும் இதனை வலியுறுத்தும்.

"அலிவந்தது—இது தன்மைதிரிபெயர்; குருடுவந்தது—இஃது உறுப்பின்கிளவி:" என முன்னைய உதாரணங்களில் வரையப்பட்ட குறிப்புக்கள்போலவே, இவ்வுதாரணங்களிலும், "—இவை முறையே காதலும் சிறப்பும்" என்னுமளவோடு அக்குறிப்பு முற்றிநிற்றல் அமையும். இங்ஙனமே இதனை அடுத்து "கெழீஇயிலி வந்தது—இது செறற்சொல்" என உதாரணமும் குறிப்பும் உரைத்திருப்பதும் நோக்கத்தக்கது. ஆகையால், 'இவை முறையே காதலும் சிறப்பும்' என்ற குறிப்பினை அடுத்து, 'கெழீஇலிவந்தது' என்ற உதாரணம் எழுதியிருந்த

எட்டுச்சுவடியைப் பெயர்த்தெழுதின எழுத்தாளர், இரண்டையும் ஒருசேரவாசித்துத் தம் திரிபுணர்ச்சியால், "இவை முறையே காதலும் சிறப்பும் கெழீஇவந்தன" என முழுவாக்கியமாக முடித்துவிட்டனர் போலும்.

இனி, "காதல் கிள்ளையினையும், யானை மகவினையும் பற்றிவந்தன" என மற்றுமொரு வாக்கியம் இவ்விடத்து அச்சுப்பிரதியிற் காணப்படுவதும், உரையாசிரியருரைத்ததன்றி 'பின்னுள்ளார் இடையே புகுத்தெழுதிய போலியுரையாமென்று தெற்றென விளங்குகின்றது. ஏனெனில்' இவ்வாக்கியமும் பழையபிரதியில் இல்லை. அன்றியும், 'என்காதல் பொலிவாயிற்று' என்பதிலுள்ள 'காதல்' என்னுஞ்சொல் காதலிக்கப்படும் மக்களாகிய உயர்திணைப் பொருளை வழங்கியதாகல்வேண்டுமல்லது, காதலிக்கப்படும் கிள்ளையாகிய அஃறிணைப்பொருளை வழங்கியதாகாது. அங்ஙனமாயின் அது, "உயர்திணை மருங்கின் நிலையினவாயினும்" என்னும் சூத்திரப்பொருளொடு மாறுகொள்ளும். அஃறிணைப் பொருளே குறிக்குஞ்சொல் அஃறிணைமுடிபுகொள்ளும்வழக்கு இச்சூத்திரத்திற்கு எவ்வாற்றானும் இலக்கியமாதலின்று. ஆகையால் இவ்வாக்கியம் இளம்பூரணர்கருத்துக்கு மாறாய்ப் பிறர் எழுதிய இடைச்செருகலே என்பது வெளிப்படை.

இன்னும் இச்சூத்திரவுரையுள் "விறற்சொல் விறலையுணர்த்துதல்;" என்று அச்சுப்புத்தகத்திற் காணும் குறிப்பினையும் "விறற்சொல்— விறலையுணர்த்துஞ்சொல்." என்று தெளிவுபெறத் திருத்திக்கொள்ளல் நன்று.

[தொடரும்.]

T. N. அப்பனையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை,
மதுரை.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

இராவணன் காமத்தினும் கோபம் மிகுதல்.

65 என்ற றத்துறை கேட்டலும் இருபது நயனம்
மின்றி றப்பன ஒத்தன; வெயில்விடு பகுவாய்
குன்றி றத்தெழித் தூரப்பினன்: குறிப்பதென்! காமன்
தன்றி றத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை!

இ-ள். என்று (சீதை கூறிய) நீதிநெறி (வாசகங்களை (இராவணன்) கேட்டவுடனே (கடுங்கோபமுண்டானதனால், அவனுடைய) இருபது கண்களும் மின்னல்களை வெளிப்படுத்துவன போல்வன (வாய்க் கோபத் தீயைக் கொட்டுவன) வாயின; (பற்கள் வெள்) ஒளி வீசுகின்ற (பத்து) வாய்களாலும் மலைகளும் தகர்ந்துவிடும்படி (அதிர்ச்சியுண்டாக) அதட்டி ஆரவாரித்தான்: (அவன் கோபத்தின் உக்கிரத்தைக்) கூறுவானேன்! (அந்தக்) கோபத்தின் தன்மை, மன்மதன் வன்மையையும் மீறிவிட்டது!

அறத்துறை-தருமமார்க்கம். (துறைதிறம் பாமற் காக்கத் தோன் றினன். வாலிவதைப்படலம், எ௬). வெயில் - ஒளி. பகு வாய் - பிளந்த வாய் - (திறக்கப்பட்டு) அகன்ற வாய். இறுதல் - ஒடிதல். தெழித் தல் - அதட்டல். ஊப்பல் - ஊத்தொலித்தல். குறித்தல் - சொல்லு தல். ('கொண்டு போகநின் இவுளியென் றுற்றதுங் குறித்தான்' அகலி கைப்படலம். ௬௧). தகைமை - தன்மை. 'என்றறத்துறை' என்பது என்ற அறத்துறை என்பதன் தொகுத்தலெனலுமாம்.

கரிய இராவணன் கார்மேகமாகவும், அவன்கண்ணின்று கோபத் தீச்சுவாலை புறப்படல் மேகத்தின்கண்ணின்று மின்னல் வெளிப்பட லாகவும் அவன் அதட்டி ஆரவாரித்தல் மேகம் குமுறி யிடித்தலாகவுங் கொள்ளும்படி கவி இராவணகோபவருணனை செய்திருப்பது பாராட் டத்தக்கது.

இராவணனது வாய் அதட்டுமுன், அவனுடைய கண் கோபத்தீச் சுவாலை வீசியதென்றது, மேகத்தின் இடியோசை கேட்கப்படுமுன், அதன் மின்னொளி காணப்படும் இயற்கைநிகழ்ச்சியோடொத்திருக் கும் பொருத்தம் கவனிக்கத்தக்கது.

இராவணனுக்குச் சீதையைப்பற்றியுண்டாகிய காமவுணர்ச்சியினும் மிக்கதாக எவ்வகை யுணர்ச்சியும் தோன்றுமென எவரும் எண்ணியிரார். ஆதலால், இது எதிர்பாராத அதிசயமென்னும்படி 'காமன் தன்திறத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை!' என்ற காம்பீரிய கவிநயம் பாராட்டத்தக்கது.

இராவணன் கோபமும் காமமும் சமமாதல்.

66 வளர்ந்த நாணினன், மாதிரம் அனைத்தையும் மறைவித்
தளந்த தோளினன், அனல்சொரி கண்ணினன், 'இவளைப்
பிளந்து தின்பன்' என் றுடன்றனன், பெயர்ந்தனன், பெயரான்,
கிளர்ந்த சீற்றமும் காதலும் எதிரெதிர் கிடைப்ப.

இ-ள். (இராவணன் தன் குறைகளைச் சீதை கூறியதனால்) மிகுகின்ற நாணமுடையவனாய் (இப்படி நாணச்செய்தாளேயென்று கொண்ட கோபத்தினால் வீராவேச மூண்டானதனால்) திசைகளெல்லாவற்றையும் மூடி அளக்கின்ற (வைபோலப் பூரித்த)தோள்களுடையவனாய்(க் கோப)த் தீயைக் கொட்டுகின்ற கண்களுடையவனாய் 'இவளைப் பிளந்து தின்பேன்' என்று சொல்லிக் கோபித்தான். (சொல்லியபடி செய்தற்கு அவளைநோக்கிச்செல்ல ஓர் அடி) பெயர்ந்தான், (இரண்டாம் அடி) பெயரானானான், (ஏனெனில், அவன்மனத்துள், அப்போது, திடீரென) எழுந்த கோப (மொருபக்க)மும் (நெடுநாளாக உள்ள) காம (மொருபக்க) மும் (ஒன்றுக்கொன்று பின்வாங்காமல்) எதிர்த்துப் போராடியதனால் (என்பது).

மாதிரம் - திசை. மறைவித்து - மறையச்செய்து - மூடி. உடலல் - கோபித்தல். பெயர்தல் - (அடி) பெயர்தல் - காலெடுத்து வைத்தல். கிடைத்தல் - எதிர்த்தல். கிடைப்ப: கிடைத்தலால் எனப் பொருள்படும் காரணப்பொருளதாகிய செயவெனெச்சம்.

'தின்பனென்று' என்பதில் 'என்று' என்பது, என்றெண்ணியென்றும் என்றுகூறி என்றும் பொருள்படுமாயினும், என்றுகூறி என்பதே கவிகருதிய பொருளென்பது, அடுத்தபாட்டில் 'சொன்ன நீசன்' எனவருவதனால் தெளிவாம்.

முந்திய பாட்டில் தொடங்கிய இராவணகோபவருணனை இப்பாட்டில் தொடுத்துக் கூறி முடிக்கப்பெற்றது.

முன், கோபம் மிகுந்து காமத்தை வென்றதாகக் கூறினர். இப்போது, அது குறைந்து காமத்தோடு சமமாயினதென்றார். இனி, அது அதிகமாக் குறைந்து தோற்றதென்பதை 'ஆண்டவாள்' என்ற கவியில், கோபாக்கினி காமவெள்ளத்தால் அவிந்ததென நயம்படக் கூறுவதனல் அறியலாம்.

இராவணன் சீதைமீது நெடுங்காலமாகக்கொண்டிருந்த காமத்துக்கும் அவன் அவள்மீது திடீரெனக்கொண்ட கோபத்துக்கும் நிகழ்ந்த போராட்டத்தின் இறுதியில் காமமே வென்றதென்றதனல், காமம் கோபத்திலும் மிக்க பலமுடையதா யிருந்ததென்பது பெறப்பட்டது. முந்திய கவியில் 'காமன்—தன்தி றத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை'யென்றதனுலும் இந்தக்கவியில்'பெயர்ந்தனன்' என்றதனுலும் எதிர்பாராது கோபத்தால் திடீரென எதிர்க்கப்பட்ட காமம் சிறிது பின்னிடைந்து கோபத்துக் கிடங்கொடுத்ததும், சடுதியில் தாக்கப்பட்டதனல் ஏற்பட்ட தடுமாற்றம் தவிர்ந்த தற்சமயத்தில் காமம் மேற்கொண்டு பின்னுக்குத் தள்ளப்படாமல் சமாளித்துக்கொண்டு தாவரித்து நிலை நின்றதும், அதன்பின்பு பிந்திய 'ஆண்டவாள்' என்னும் கவியில் 'மூண்ட காலவெந் தீயென முற்றிய சீற்றம்—நீண்ட காதல்நீர் நீத்தத்தின் வீவுறு நிலையில்-மீண்டு நின்று' என்றதனல் காமம் தன் அதிக பலத்தை உபயோகித்துக் கோபத்தைப் பின்னிடையச்செய்து தான் முன் இழந்த இடத்தை மீட்டுத் தன் பூர்வநிலையடைந்ததும், இயற்கைநிகழ்ச்சிகளாய்த் தன்மைநவிற்சியணிக்கு இனிய உதாரணமாயிருத்தல் நோக்கி நுகரத்தக்கது.

அப்போது அநுமான் ஆலோசித்தல்.

மரத்தின்மேல் மறைந்திருந்த அநுமான் 'இவளைப் பிளந்து தின்பன்' என்று இராவணன் கோபித்துக்கூறியதைக் கேட்டு, ஒருகால் சொல்லியபடி செய்துவிடுவானேவென்று அஞ்சி, அவ்வாறு செய்யப் புகுவானனல், அவன்மேற் குதித்து மிதித்துக்கொன்றுவிடுவேனென்று எண்ணினன்.

இராவணன் கோபம் தணிந்தபின் கூறுதல்.

ஊழித்தீப்போலக் கதித்தெழுந்த கோபம் உகாந்தவெள்ளம் போலப் பெருகிய காமத்தால் அழியாநிற்க, இராவணன், குறித்தகாரியம்

கோபத்தால் கெட்டுப்போமேயன்றிச் சித்தியாகா தென்று கருதிச் சீதை கூறியவைகளுக்குச் சமாதானம் கூறுகின்றான்.

இராவணன் சீதைக்கு எதிர்மொழி கூறல்.

(தன் வெற்றிதோல்விகள், வீர வெற்றிதோல்விகளல்ல, விளையாட்டு வெற்றிதோல்விகளெனல்)

67 'கொல்வெனென் றுடன்றேன்; உன்னைக் கொன்றிலேன்;
குறித்துச் சொன்ன
சொல்லுள; அவற்றுக் கெல்லாம் காரணம்
தெரியச் சொல்லின்,
ஒல்வதீ தொல்லா தீதென் றெனக்குமொன்
றுலகத் துண்டே;
வெல்வதும் தோற்றல் தானும் விளையாட்டின்
விளைந்த மேனாள்.'

இ-ள். '(நீ என்னைப் பழித்ததனால்) "உன்னைக்கொன்றிடுவேன்" என்று கோபங்கொண்டேன்; (ஆயினும்) கொன்றேனில்லை: (பழிமொழி கூறிய உனக்கு எதிர்மொழி கூறவேண்டியிருத்தலால்.) (நீ என்னைக்) குறித்துச் சொன்ன (பழிச்) சொற்கள் (தோற்றத்தில் மெய்பாக) இருக்கின்றன: (உண்மையில் அப்படியில்லை.) (அச்சொற்கள் மெய்யானவையல்லவென உருபிக்கும்) காரணத்தை விளங்கச் சொன்னால், (என்னாலாகாத காரியமொன்றுமில்லையாதலால்,) எனக்கு இந்தக்காரியம் செய்ய முடியுமானது இந்தக்காரியம் செய்ய முடியாதது என (எடுத்துக்கூறக் கூடிய) ஒருகாரியம் உலகத்தில் இல்லை. ("ஏன் சிலருக்குத் தோற்றாய்?" என்பாயேல், கேள்,) முன்னாளில் வெற்றிகள் பெற்றதும் தோல்விகள் உற்றதும் விளையாட்டிலே நிகழ்ந்தவைகள். ("விளையாட்டுக் கருத்தோடு உன் பலத்தை வேண்டுமென்றே உபயோகிக்காமல் நீ தோற்றிருக்கலாம். "'வெல்வதும் விளையாட்டின் விளைந்தது'" என்றாயே. அஃது என்னை" யெனில், யான் கோபங்கொண்டு எதிர்த்தற்குரிய பலமுடையார் எவரும் எங்கும் இலராதலால், (புலி புலியை எதிர்த்தல்போலன்றிப் பூனையை எதிர்த்தல்போல) என் பகைவரை வீரமாக எதிர்க்காது விளையாட்டாக எதிர்த்து வென்றேன் என்பது.)'

உடலல் - கோபித்தல். ஒல்வது - இயல்வது. உண்டே என்பதில் ஏகாரம் எதிர்மறை; 'உன்னைக் கொல்கிலேன்' 'உலகத்துண்டோ' என்பனவும் பாடங்கள்.

இராவணன் தான் எல்லாம்வல்லானென்றும் தன்வெற்றிதோல்விகள் விளையாட்டில் விளைந்தனவென்றுங் கூறியது, உள்ளீடு ஒன்றுமில்லாத பகட்டுரையாகக் கருதற்கிடமாயுள்ளது. அது ஆடம்பரமான வெற்றுரையன்றென உருபித்தற்குரியதாகத் தான் கருதிய நியாயத்தை உடனே கூறாமல் மனத்துள் வைத்துக்கொண்டு வேறுசில சொல்லிவிட்டுப் பின்பு 'வென்றோரும்' என்ற கவியிற் கூறுகின்றான். அவன் அவனுடைய தற்புகழ்ச்சியுரையை ஒப்புக்கொள்ளச்செய்யத் தக்க நியாய மில்லாததனால் அந்த நியாயத்தைக் கூறவில்லையெனச் சீதையை முடிவுசெய்யச்செய்து அதன்பின்பு அந்த நியாயத்தைக் கூறுவது, ஆதியிலேயே கூறுவதினும் விசேட நயம் பயப்பதாகவும் சிறந்த அதிசயம் விளைப்பதாகவும் இருத்தல் குறிக்கத்தக்கது.

(சீதையை வஞ்சித்துக் கவர்ந்ததற்கு நியாயம் கூறல்)

68 'ஒன்றுகேள், உரைக்க; நிற்கோர் உயிரென உரியோன் தன்னைக்
கொன்றுகோள் இழைத்தால், நீநின் உயிர்விடில், கூற்றம் கூடும்;
என்றன் ஆருயிரும் நீங்கும், என்பதை இயைய எண்ணி,
அன்றுநான் வஞ்சம் செய்த: தார்எனக் கமரில் நேர்வார்?'

இ-ள். '(உன்னை வஞ்சகத்தாற் கவர்ந்தேனென்றாய். ஏன் அவ்வாறு செய்தேனெனில்,) உண்மையை (நான்) சொல்ல (நீ) கேட்பாயாக. அந்நாளில், உன்னைக்கவா, நான் வஞ்சகஞ்செய்தது, உனக்கு ஒப்பற்ற உயிர்போல உரியோனான இராமனைக் கொன்று (உனக்குத்) தீமைசெய்தேனானல், (நீ உயிர்விடுவாய்,) நீ உன் உயிரைவிடுவாயானல், (அத்துன்பந் தாங்கமாட்டாத என்பால்) எமன் வந்து சேர்வான், என் அருமையான உயிரும் நீங்கிவிடும் என்பதை யெண்ணியே (யன்றி, இராமலக்குமணரோடு போர்செய்தற்கஞ்சியன்று): என்னைப் போரில் எதிர்ப்பார் யார் (உளர்)? (ஒருவருமில்லை.)'

ஒன்று - உண்மை (தமிழகராதி). கோள் - தீமை. இழைத்தல் - செய்தல். கூற்றம் - யமன். கூடும் -(வந்து) சேர்வான். இயைய-பொருந்த. அமர் - போர். நேர்தல் - எதிர்த்தல்.

'கொன்றுகோள் இழைத்தால்' என்பதற்கும் 'நீ நின் உயிர்விடில்' என்பதற்கும் இடையே 'நீ உயிர்விடுவாய்' என்பதைக் கூறாமற்கூறிய நயம் நோக்கத்தக்கது. இது, நூலழகுகள் பத்துள் முதன்மையான 'சுருங்கச் சொல்லல்' 'விளங்கவைத்தல்' என்னும் இரண்டு வனப்புக்களை ஒருசேர உடையதாகவுள்ளது.

(தேவர்களே, அவர்கள் தேவியரை யான் கொண்டுவந்தால், மீட்க நினையாரே, இராமலக்குமணரான மனிதரோ உன்னை மீட்க வருவா ரெனல்)

69 'மானென்ப தறிந்து போன மானுட ராவார் மீண்டு
யானென்ப தறிந்தால் வாரார்; ஏழைமை எண்ணி நோக்கல்;
தேனென்ப தறிந்த சொல்லாய், தேவர்தாம் யாவ ரே''எங்
கோன்''என்ப தறிந்த பின்னைத் திரம்புவர், குறையி னல்லால்.'

இ-ள். 'தேன்போலும் (இனிய) மொழியினாய், (''யான் இருக்கு மிடந் தெரிந்தவுடனே, இராமலக்குமணர் வந்து என்னை அதஞ்செய்து உன்னை மீட்டுவிடுவார்கள்'' என்று உண்மையறியாது கூறினாய். மாரீச மாயமானை உண்மை) மானென்று (பின்தொடர்ந்து) போன (கேவலம்) மனிதர் ஆன இராமலக்குமணர்கள்,) (உன்னைக்கவர்ந்து கொண்டு போன வன்) யான் என்று தெரிந்தால், (''ராசா கையைப்பிடித்தால் விதிவசம்'' என்ற பழமொழியை நினைவுகூர்ந்து) திரும்பி (உன்னை மீட்க) வாமாட் டார்கள். (உன்) அறியாமையால் (அவர்கள் வருவார்களென்று) எண்ணி (அவர்கள் வரவை) எதிர்பாராதே. (தேவர்களே, அவர்கள் தேவியர்களை டான் கொண்டுவந்தால், கொண்டுபோனவன்) ''எங்கோன்'' 'என்று அவர்கள் ராசபத்தியோடு கூறிக்கொள்ளும் யான்) என்று (தெரியுமுன் மீட்க எண்ணுவார்களேயன்றித) தெரிந்த பின்பு (அவர்களுக்கு முடிவு காலம் நெருங்கி ஆயுள்நாள்) சுருங்கினாலல்லாமல் (மீட்க எண்ணும் தவறு செய்யார். அப்படித்) தவறு செய்வார் தேவருள் யாவரே (உளர்)? (ஒருவருமேயிலர்,)'

ஏழைமை (யால்) - அறியாமை (யால்), நோக்கல் - எதிர்பாராதே; அல்லீற்று எதிர்மறை ஏவல்வினைமுற்று. 'வருவிருந்து பார்த்திருப் பான்' (குறள் 87) என்பதில் 'பார்த்தல்' எதிர்பார்த்தலை யுணர்த்தியது போல, இங்கே 'நோக்கல்' எதிர்பார்த்தலை யுணர்த்தியது. 'ஏழைமை

எண்ணி நோக்கல்' என்பதற்கு (வருவார்களென்று) எண்ணி எதிர் பார்த்தல் அறியாமையாம் என்றும் பொருள் கொள்ளலாம். திறம்பு தல் - தவறுதல். தாம் சாரியை. ஏ, வினு அல்லது பிரிநிலை.

சிறிது ஊன்றி நோக்கினுல் தெரிந்துகொள்ளக்கூடிய சொற் களும் சொற்றொடர்களும் சொல்லப்படாது விடப்பட்டிருத்தலைக் கம்பராமாயணத்திற் பலகவிகளில் காணலாம். இந்தக் கவியில் 'குறை யினல்லால்' என்பதன்மூன் 'வாழ்நாள்' என்பது கூறுது விடப் பட்டிருக்கிறது. 'வாழ்நாள்'தான் கூறப்படவில்லையென்பது, பின் வரும் 'பள்ள நீர்' என்ற கவியில், குறைந்த வாழ்நாளுடையவளே என்று பொருள்படும் 'குறைந்த நாளோய்' என்பதனுல் தெளிவாம்.

(உண்மையில், ஒருவரும் என்னை வெல்லவில்லையென்பது, யானே திரிலோகாதிபதியாக விருத்தலால் தெளிவாமெனல்).

70 'வென்றேரும் இருப்ப, யார்க்கும் மேலவர் விளிவி லாதோர்
என்றேரும் இருப்ப, அன்றே, இந்திரன் ஏவல் செய்ய,
ஒன்றுத உலகம் மூன்றும் ஆள்கின்ற ஒருவன் யானே:
மென்றோளாய், இதற்கு வேறோர் காரணம் விரிப்ப துண்டோ?'

இ-ள். 'மென்மையான தோள்களையுடையாளே, (யான் "இதன் மூன் வெல்வதும் தோற்றல் தானும் விளையாட்டில் விளைந்த மேனுள்" என்றதை நீ ஒப்புக்கொண்டிராவிட்டால், இப்போது சொல்வதைக் கேள். வென்றவான்றித் தோற்றவர் அரசாள்வரோ?) வென்றவர் (களென்று நீ சொல்லியவர்) களிருக்கவேயும், (அவர்களல்லாமல்) "எல் லாருக்கும் மேலானவர்கள் சாவில்லாதவர்கள்" என்று சொல்லப்பட்டவர் (களான, நீ என்னை வென்றவனென்ற சிவனை யுள்ளிட்ட திரிமூர்த்தி) களிருக்கவேயும், இந்திரன் பணிவிடை செய்யாநிற்க, மூன்றுலகத்தை யும் ஆள்கின்ற ஏகாதிபதி (யாக இருக்கின்றவன்) யானல்லவா? இப்படி (யான் திரிலோகாதிபதியாக) இருப்பதற்கு (உண்மையில் என்னை வென் றவனொருவரு மில்லாதிருப்பதன்றி) வேறொரு காரணம் சொல்ல வேண்டி யதுண்டோ?'

விளிவு - சாவு. ஒன்றுதல் - நெருங்குதல். ஒன்றுத உலகம் மூன்றும் - (ஒன்றுக்கொன்று தூரமாய்) நெருங்கியிராத மூன்று உலகங்

களையும். ஒருவன் என்ற சொல், உலகங்களைப் பொதுநீக்கித் தானொருவனே தனியாக ஆள்பவன் என்ற பொருளை உணர்த்தி நின்றது. விரித்தல் - சொல்லல் (நாமதீப நிகண்டு 652).

'அன்றே' என்பதை 'யானே அன்றே' என இயைத்துப் பொருள் கூறப்பட்டது. அப்படி இயைக்காமல் 'இருப்ப அன்றே' என்றிருக்கிற படியே வைத்து 'வென்றோரும்...............விளிவிலாதோரென்றோரும்' இருக்கவுமல்லவா, உலக மூன்றும் ஆள்கின்ற ஒருவன் யான் (ஆக உள்ளேன்) என்று பொருள் கூறலுமாம்.

'யார்க்கும் மேலவர் விளிவிலாதோர் என்றோரும் என்பதற்கு - த்ரிமூர்த்திகளினும் உயர்ந்தவராய் (ப் பகைவர்களால்) அழிவில்லாதவரென்று நீ கருதுகின்ற ராமலக்ஷ்மணரு மென்று கூறினுமாம்'

'மூன்றும் உணர்கின்ற' என்பதும் பாடம்.

சீதை, இராவணனை நோக்கி 'உன்னைக் கால்விரலொன்றா லழுத்திக் கதறச்செய்த சிவன் வில்லை முறித்தவனும் உன்னை வென்ற கார்த்தவீரியனைக் கொன்ற பரசுராமனைப் பங்கப்படுத்தியவனுமான வீராதி வீரன் இராமன்' என்று கூறியதை இராவணன் எவ்வாறாகவும் மறுக்க முடியாதென யாரும் இயல்பாக எண்ணியிருப்பார். அவர்களையெல்லாம் இந்தக்கவி பரமாச்சரியபாவசராக்கும் பான்மையதாயிருத்தல் பெரிதும் பாராட்டத்தக்கது.

இந்தப் படலத்தில் இராவணனும் சீதையும் நிகழ்த்திய இனிமையான வாதப்பிரதிவாதங்களடங்கிய கவிகளின் முடிவாகவும் *முடியாகவு முள்ள இந்தக்கவி கம்பரது வழக்குத்திறத்தை விளக்குங் கவிகளுள்ளே சிறந்த ஒன்றாயிருத்தல் சிந்திக்கத்தக்கது.

(இராமலக்குமணரை ஏவல்கொள்வே னெனல்)

['இன்றே சென்று என் இருபதுகைகளிலே ஒரு கையாலேயே இராமலக்குமண ரிருவரையும் ஒருசேரப்பிடித்துக் கொண்டுவந்து உன் கண்ணெதிரே ஏவல்கொள்வேன், காண்பாயாக.']

(உன்னவ ரொருவரையும் விடாமற் கொன்று உன்னையும் கொல்வேனெனல்)

---

*முடி - மகுடம் - கிரீடம்.

71 'பள்ளநீர் அயோத்தி நண்ணிப் பரதனே முதலி னோராண்
டுள்ளவர் தம்மை யெல்லாம் உயிர்குடித், தூழித் தீயின்
வெள்ளநீர் மிதிலை யோரை வேரறுத், தெளிதின் எய்திக்
கொள்வன்நின் உயிரும்: என்னை அறிந்திலை குறைந்த நாளோய்.'

இ-ள். '(சாம்நாள் நெருங்கி) வாழ்நாள் சுருங்கியவளே, (என் கருத்துக்கு இசையாயாயின், இராமலக்குமணரைக் கொன்றிடுவேன். அவர்களைக் கொன்றமையோடு நின்றமையாமல், அவர்கள் பிறந்த ஊரா கிய) அயோத்திமா நகரத்தை அடைந்து, அங்குள்ளவரான பரதன் முதலியோரெல்லாரையும் கொன்று, உகாந்தகாலாக்கினிபோல (அங்கு நின்று சென்று நீ பிறந்த ஊராகிய) மிதிலாபுரி (யில் உள்ள உன் தந்தை சனகன் முதலி) யோரை (க்குடியோடு அடியோடு ஒழித்து) நிர்மூல மாக்கி இங்கே வந்து உன்னுயிரையும் வாங்கிவிடுவேன். (இவ்வளவும் செய்யும் வன்மையுடையவனென) என்னை அறிந்தாயில்லை.'

பள்ள நீர் - ஆழமுடைய நீர். ஆண்டு - அங்கு. உயிர்குடித்தல் - கொல்லல். தீயின் - தீப்போல. வெள்ளநீர் - பெருக்குநீர். நாள் - வாழ்நாள் - ஆயுள் (தமிழகராதி). எளிதின் - எளிதாக. எய்தி - அடைந்து - வந்து சேர்ந்து.

பள்ளநீர் வெள்ளநீர் என்பவை முறையே அயோத்திக்கும் மிதிலைக்கும் அருகே செல்லும் ஆற்று நீர்களையேனும் அந் நகரங்களைச் சூழ்ந்துள்ள அகழிநீர்களையேனும் குறிப்பனவாம்.

'குறைந்த நாள்' என்றது அப்பொருளுடைய 'அற்பாயுசு' என்னும் வடமொழித்தொடரை நினைவுறுத்துகின்றது. 'குறைந்த நாளோய்' என்றது, கோபத்திற் கூறியதாயினும், அது, கோப உணர்ச்சியல்லாமல் 'இளமையும் அழகும் பாழ்படும்படி அகாலமரணம் அடையப்போகின்றாயே' என்னும் பரிதாப உணர்ச்சியையும் புலப்படுத்தும் நயம் நோக்கி நுகரத்தக்கது.

இரண்டுமாதம் கழியுமுன் இணங்காயாயின், இறப்பாயெனல்.

[இராவணன், இவ்வாறு கூறி மிகவும் கோபித்துத் தன் வாளைப் பார்த்து (இதற்கு இரையாக்குவேனெனச் சீதைக்குக் குறிப்பித்து) 'நீ இணங்குவாயல்லையானால், உன்னைக் கொல்லக் குறித்த காலம், இன்னும் இரண்டு மாதங் கழிந்தவுடனே வந்துவிடும். அப்போது நேரவிருக்கிறதை ஆலோசித்துப் பார்' என்று கூறிவிட்டு அப்புறம் போனான்.]

இராவணன், சீதையைக் காக்கும் அரக்கியரை அவளைவசப்படுத்தும்படி வற்புறுத்தல்.

போனவன், சீதையின் காவலாளரான அரக்கிமாரை நோக்கிச் 'சீதையைப் பயமாகவாவது நயமாகவாவது வசப்படுத்தி அதனை என்னிடம் வந்து சொல்லுங்கள். அவளை வசப்படுத்தீராயின், உங்களைக் கொன்றிடுவேன்' என்று கூறித் தன் இருப்பிடம்நோக்கிச் சென்றான்.

இராவணன் போனபின், இராட்சசிகள் சீதையைத் துன்புறுத்தல்.

இராவணன் துன்புறுத்திவிட்டுப்போகப்பெற்ற சீதை, இராகு விழுங்கி உமிழ்ந்த சந்திரன் போன்றாள். அவன் போனபின், அரக்கியர்கள், அவளை அச்சுறுத்துவாராய்க், கண்களினின்று நெருப்புப்பொறி பறக்கப் பார்த்து, வாள்களையும் வேல்களையும் உயரத்தூக்கிக்கொண்டு 'கொல்லுங்கள், தின்னுங்கள்' என்று கூறினார்கள். பின்பு, 'கொடிய பெண்களெவரினுங் கொடியவளே, பிரமதேவனுக்குப் பேரன் மகனும் வேதவிற்பன்னனும் மாதவஞ்செய்து தீவினை தீர்ந்தவனுமான இராவணேசுரன் உன்பால் மெய்யன்பு வைத்ததன்றி வேறு பிழையில்லாதவன். அப்படிப்பட்டவன் மனம்வருந்தும்படி புண்ணிற் கோலிட்டாற் போன்ற பொல்லாதவார்த்தைகளைச் சொல்லி நீ பிறந்த குடியும் புகுந்த குடியும் ஒழிந்து கெடும்படி செய்தாய். நீ இணங்காயாயின், இப்போதேகொன்றிடுவோம்: இனி வாழாய்.' என்று அதட்டி வற்புறுத்திக் கூறினார்கள்.

திரிசடை சீதையைத் தேற்றல்.

சீதை, இராவணனும் இராட்சசிகளும் கொல்லப்புகுந்ததனால் ஒரு சிறிதும் மனவுறுதி குறைவுறாதவளாய்த் துன்பக் கண்ணீர் சொரிந்து துன்பச் சிரிப்புச் சிரித்தாள். அதுகண்ட திரிசடை, 'அம்மா, நான் கண்ட கனவின் நற்பயன்கள் இன்னவையென யான் முன்னம் சொன்னதை நினைந்து வருந்தாதிருப்பாயாக. உன் மனத்தைக் கலங்கவிடுதல் உன் அறிவுக்கு அடுத்ததன்று' என்று தேறுதல் வார்த்தை கூறினாள். திரிசடை கூறிய கனவிவரத்தை அரக்கியர் விசாரித்துத் தெரிந்து நல்லுணர்வுற்றுக் கோபம் நீங்கிச் சீதையை அச்சுறுத்துவதை நிறுத்தினார்கள். அவள் சிறிது துன்பம் நீங்கி உயிர்தரித்திருந்தாள்.

நிந்தனைப்படலம் முற்றும்.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

"குடஞ்சுட்டு"

நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர் எழுதியது.

கலித்தொகையினுள், (109) "சீரார்நிழல குடஞ்சுட்டினம்" என வருவதற்கு "இன்னதனைக் குடம்பால் போதுமென்று கருதப்படும் பசுத்திரள்" என உரை எழுதுவர் நச்சினார்க்கினியர். குடம் எனும் சொல்லிற்கு இத்தொடரில் கலம் எனும் பொருளே தக்கது என உள்ளத்திற்கொண்டுபோலும் உரையாசிரியர் இவ்வாறு கூறிப்போயினார். சொற்பிறப்பு ஆராய்ச்சி நிரம்பாத முற்காலங்களில் தமிழ்வல்லோர் பல சொற்களின் உண்மைக்கருத்தை நிச்சயம்பண்ணாது விட்டமையில் புதுமை ஒன்றும் தோன்றாது. தற்கால ஆராய்ச்சிமுடிபுகளை நோக்க, இங்கு நாம் எடுத்தோதியநிலையில் குடச்சொல்லின் பொருள் வேறு என்பதை இப்போது தெளிவிப்போம்.

"குடஞ்சுட்டு" என்னும் தொடரோடு "மக்கட்சுட்டு" எனும் வேறொருதொடரை நோக்குவது நன்று. மக்கட்சுட்டு என்றதற்கு "மக்களாகிய '(நன்குமதிக்கப்படும்) பொருள்" என்று உரைஆசிரியர் நச்சினார்க்கினியரே கருத்து எழுதுகின்றார். (தொல்காப். சொல். 1). அங்ஙனமாயின், "குடஞ்சுட்டு" எனுந்தொடருக்கும் "பசுக்களாகிய பொருள் (=மிருகம்)" என்று கருத்துரைத்தல் தகாதா? "மக்கட்சுட்டு" என்பதற்கு மக்கள் எனும் பொருள் என்பதைக்காட்டில் "மக்களென்னும் சொல்" என வைப்பது அதிக தகுதியாகும் போலும். இது சூத்திரத்தை ஆராயுங்கால் விளக்கமாகும்.

> உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
> அஃறிணை என்மனார் அவர்அல பிறவே
> ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே

"இச்சூத்திரம் சொல்லைப்பற்றியது. உயர்திணைச்சொல் அஃறிணைச் சொல்லெனச் சொல் இருவகைப்படும். இவற்றுள் மக்கட்சொல் (=மக்கட் சுட்டு) உயர்திணை. பிறசொற்கள் அஃறிணை" என்பதே சூத்திரத்தின் சொல்நிலைக்கும் பொருள்நிலைக்கும் ஏற்ற கருத்து. சுட்டு என்பதும் சொல் என்பதும் பிறப்பளவில் ஒன்றே என மேல் விளக்கப்படும்.

"குடம்" மாட்டின்பெயர்.

இனிக் குடம் எனும் குறியீட்டின் உண்மை அர்த்தம் யாது? இச்சொல், குட + அம் எனப் பிரியும். இதில் "அம்" எனும் விகுதி "அது" எனும் வேறொருசொல்லின் திரிபு. இவ் "அது" பொருளைப் பிரித்துக்காட்டுதற்கு உதவுவது. "அது" எனுஞ்சொல்லே அடு, அறு, அம், அர், அல், அழ், அள், அண் எனவும் அ எனக் கடைக்குறைபாயும் நிற்கும். இவ்வுருவங்களெல்லாம் பொருளைப் பிரித்துணர்த்தும்வகையால் வேறுசொற்களுக்கு விகுதியாகும். [இவற்றின் விரிவை "தமிழ்ச்சொற்பிறப்பாராய்ச்சி" நூல் 27-ம் பக்கத்திற் காண்க.] அப்பால் "குட" எனும் அடி வளைவைக் குறிக்கும். "குடவென்பது..........வளைவையுணர்த்துவதோர் உரிச்சொல்" என நச்சினார்க்கினியரும் கூறுவர் (திருமுருகாற். 229 உரை). ஆகவே குட + அது =(1) வளைந்த அது; (2) வளைவைப் புறப்பாடானதோற்றமாய்க்கொண்ட ஒரு பொருள்; (3) கொம்பு; (4) கொம்புடைய மிருகம்; (5) எருது; (6) பசு எனப் பொருள்வேறுபாடு ஏற்பட்டது. [இவ்வாறான பொருள்வேறுபாடுகள் சொற்களில் வந்து பொருந்தும் முறையையும் முன்குறித்த நூலின் ஐந்தாம் அதிகாரத்தினுட் காண்க]. வளைந்த கொம்புடைமையைக்கொண்டு மாடு பெயரிடப்பட்டதற்கு மலையாளத்தில் பசு கொம்பி, கொம்பிச்சி எனப் பெயரிடப்பட்டிருத்தலும் ஒரு சான்று. மாட்டைப்போல கொம்புடைய மிருகங்கள் வேறுபல இருப்ப மாட்டுக்கே கொம்புடைமையைக்கொண்டு பெயரீடு செய்யப்பட்டது எவ்வாறு எனில், முதலிடத்தில் இப்பெயரீடு மாட்டுக்கு ஏற்பட்டுவிட்டபின், வேறுமிருகங்களுக்கு வேறுவகையாய்ப் பெயரீடுசெய்யப்பட்டது என அறிக.

கொம்புடைமையைப் புறப்பாடான குணமாகக்கொண்ட மிருகங்களுட் பொதுவகையில் மாடும், சிறப்புவகையில் பசுவுமே ஆதியில் குடம் எனப்பட்டன என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. கலித்தொகையிற் காணப்படும் பாடல்கள் எழுந்த காலத்தில் தமிழிலே குடம் எனும் தனிச்சொல் பசுவைமட்டில் குறியாது கலம் ஆதிய பிற பொருட்களையும் குறித்தமையினாற்போலும், கேவலம் குடம் என்னாது குடஞ்சுட்டு (=குடம் எனும் சொல்லால் அறியப்படுவது) என்றனர்

எனக்கொள்ளக்கிடக்கின்றது. 107—ம் பாடலில் ஆயரைக் "குடஞ் சுட்டவர்" எனக்குறித்தமையையும் நோக்குக. ஆயின், கலித்தொகை யின் பாடல்களுக்கு முற்பட்டகாலத்தில், குடம் எனும் தனிச் சொல் லே பசுவைக்குறித்தது என்பதற்கு பிங்கலந்தையில் (10, 351) அவ் வுருவம் பசுவுக்குப் பேராய் வருதலையும், தமிழின் பாகதங்களாகிய கூயிமொழியில் எருதுக்கும் பசுவுக்கும் "கோடி" என்றும்; சிங்களத்தில் "ஹொணு" என்றும் பெயர்கள் இருத்தலையும் நோக்கலாம். கோடி எனுஞ்சொல் வடமொழி ஹோ எனும் பெயரிலிருந்து வந்ததாகச் சொல்லல் அமையாது. என்னை? ஹோ எனும் சொல்லினின்று கோடி எழுந்ததாயின், டகரம்ஒன்று பின்னிடத்தில் வருதற்கு நியாயமில்லை. ஹொணு எனும் சிங்களம் ஹொண் + அக் "ஒருமாடு" எனவிரியுமாதலால், ஹொண் என்பதே ஆதியுருவம். இதில்ணகரம் டகாத்தின்திரிபாய் வருதல் ஒக்கும். ஆதலால், அச்சிங்களச்சொல்லும் குடத்தோடு அன்றி ஹோவோடு உறவுகொள்ள அறியாது. பாளியில் ஹோண எனும் மாட்டுப்பெயரும் அப்படியே. கோடி, ஹொணு எனும் சொற்கள் மாட்டின் பெயராய்த் தமிழ்ப்பாகதங்களில் விளங்குகின்றமைபால், இவற்றையொத்த குடம் எனும் சொல்லும் மாட்டையே ஓர்காலம் உணர்த்திற்று என்பது நன்ருகத்துணியப்படும். அதுமட்டோ? மிகப் பழங்காலத்துமொழிகளுள் ஒன்ருகிய சுமேரியமும் இதில் நமக்கு ஒரு சான்று. சுமேரியத்தில் எருது ஹுட் எனப்படும். ஹுற், ஹு எனும் உருவங்களும் அதில் உள. இனி, இக், ஹுட் எனும் சொல் விற்கு அந்தமொழியில் வரிவடிவு யாதெனில், கொம்பு மிகநீண்டு வளர்ந்த எருதின் தலையேயாம். (G. A. Barton: The Origin and Devel. of Babyl. writ....No 259). வளர்ந்த கொம்பின் நிமித்த மாகவே எருதுக்கு வளர்ந்தது எனும் அர்த்தமுள்ள குட் எனும் பெயரீடு எழுந்ததென்பதிற்கு ஐயப்பாடு ஒருசிறிதும் இல்லை.

பிறமொழிகளிற் குடச்சொல்லு

இனி வடமொழி ஹோ, பழஞ்சர்மனிய கூஒ (Chuo), சர்மனிய கூ (Kuh), பழம் ஆங்கில கூ (Cu), ஆங்கில கௌ (Cow), கிரேக்க பொஉஸ் (bous), லத்தீன் பொஸ் (bos) எனும் இச்சொற்களெல் லாம் ஒத்தபிறப்புடையன என்றது ஐரோப்பிய மொழிநூலாருடைய

துணிபு. (மோ, வொஉஸ் என்ற இவற்றில் ககரம் பகரமானமை, தமிழ் "பத்து" 'கன்னடத்தில் ஹத்து என வந்ததற்கு எதிர்நிரலான ஒரு முறை). ஆயின், இவ் ஐரோப்பிய சொற்களுக்கு அடியாது, இவை எவ்வாறு மாட்டுக்குப்பெயராயின என்று அறுதியிட ஐரோப்பிய மொழிநூலாளர் அறியார். நந் தமிழ்மூலமாகவே இச்சொற்களின் உண்மையான உற்பத்தியைக் காட்டும் அடியும், அவ்வடியின் ஆதிப் பொருளும், அப்பொருள் மாட்டுக்குப் பொருந்தியகாரணமும் தெற் றெனப்புலப்படும். வளைந்தகொம்புடைமையாலே, முதற்கண், எருது பசு என்ற வேற்றுமையின்றி மாட்டினத்துக்கும், பின் பசுவிற்கும் குடம் எனும் குறியீடு வாலாயிற்று என்றது தமிழ்அடியின் பரிசோதனை யினலன்றி அறியப்படாது. ஐரோப்பியர், எருதை பசுவை வொஉஸ் கௌ ஆதிய பெயரால் அழைத்தும் அப்பெயர்கள் எப்படி அம்மிருகங் களுக்குப்பொருந்துகின்றன எனத் தோரார். எமது தமிழ் குடப்பெய ரே அவர் வழங்கும் பெயர்களின் பொருளையும் ஏற்புடைமையையும் வெளியாக்கும்.

அதுமட்டோ! எந்தமிழின் தெளிவுபொருந்திய சொல்லாக்கத்தின் மாட்சி எவ்வாறெனில், குட எனும் சொல் தான் எழுந்தபான்மையையும் நாம் ஆராய்ந்தறிந்து கொள்ளலாம். குட எனுஞ் சொல்லிற்கு மூந்திய உருவம் குழை என்பது. குழைக்கு மூந்தியது உழ-ல் என்பது. உழல் தனுக்கு முந்தியது உள் என்பது. உள் எனுஞ்சொல் சேய்மைச்சுட் டாகிய உகரமும், அச்சுட்டைத் துளக்கமாக்குகின்ற ளகரமாகிய வியஞ் சனமும் சேர்ந்து உண்டானது. சேய்மையின் மற்றொரு நோக்காகிய மறைந்ததன்மையைக் காட்டும் முகத்தால் மறைவிடத்திலே, யாதொன் றின் அகத்திலே இருப்பதையும் குறிப்பது. இதனுல், உட்புறத்தை நாடி நாடி வருதலே உழல்தல் (வளைந்து வரல்) எனப்படும். உழ-ல் எனுஞ்சொல் ககரமாகிய முதனிலைமெய்யினல் வலியுறுத்தப்படும் போது குழை-தல் எனும் உருவம் தோன்றி, வளைந்திருத்தலைக் காட்டும். குழை-தலின் வேறொரு உருவமே குட என்பது. இதன் விரிவையும் முன் குறிப்பிட்ட சொற்பிறப்பாராய்ச்சிநூலின் அநுபந்தத்திற் பாக் கக் காண்க. சொற்களைத் தலையடிவரையிலும் துருவி ஆராய்ந்து உய்த் துணாத்தரும் பெற்றிவாய்ந்தது, உலகின் மொழிகளுளெல்லாம் எம் தமிழ்மொழி ஒன்றுமே என்பதை நோக்கி மகிழ்க.

சுட்டே சொல்.

இனி, சொல்லு என்ற உருவமும் சுட்டு என்ற உருவமும் ஒரு பிறப்புடையனவே எனக்காட்டுவோம். தொல்காப்பியச் சொல்லதிகார முதற்சூத்திரத்திற்குத் திருத்தமாக உரைசெய்யுங்கால் மக்கட்சுட்டு எனும் தொடர் மக்கட்சொல்லு (மக்கள் எனும் சொல்) என நிற்கும் என முன்னர் காட்டினோம். அவ்வாறே குடஞ்சுட்டு எனும் தொடர் குடச்சொல் என வருதல் பொருந்தும். இதனால் தமிழ்மொழியின் ஆதிகாலத்தில் சுட்டு எனும் உருவத்திற்குச் சொல் எனும் ஒரு அர்த்தம் இருந்தது என வைத்துக்கோடலாம். சுட்டு எனும் உருவம் "எடுத்துச்சொல்லுதல்" எனும் பொருளில் "சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக்குமரி" எனுஞ் சிலப்பதிகாரவரியில் (12, 21) வருகின்றது. தொல்காப்பிய எழுத்ததிகாரத்திலும் "புணர்நிலைச்சுட்டு" (107) "பெயர்நிலைச்சுட்டு" (117) ஆதிய தொடர்களில் சுட்டிற்கு சொல்லுதல் (கருதுதல்) என்ற பொருளே தொனிக்கின்றது. உள்ளபடி, சொல்லுதல் எனும் உருவத்திற்குப் பிறப்பிடம் சுட்டுதலேயாம். "சுட்டுதல்" சொட்டுதல் எனவந்து சொல்லுதல் என்றாயிற்று. டகரம் ளகர, ழகர, லகரங்களாதல் தமிழ் வழக்கு. இனிச் சுட்டுதலிற்கு அடி யாதெனில் தொடுதல் எனும்உருவமாம். சைகையினால் அல்லது குரலினால் தொட்டுக்காட்டுதல் சுட்டுதல் எனப்படும். ஈண்டு அ, உ, இ, எ எனும் ஒலிகளால் அண்மையில், சேய்மையில், கீழே, மேலே உள்ள பொருட்கள் எத்துணைப் பொருத்தமாகச் சுட்டிக்காட்டப்படுவனவாகின்றன என்பதை உச்சரித்துக்காண்க. தமிழ்ச்சொற்களெல்லாம் சுட்டிக்காட்டுகின்ற இந் நால்வகை ஒலியையுமே அடியாகக்கொண்டு பிறந்தன என்றதுறை பக்கவாதமின்றி ஆராய்வோர்க்கு இனிது புலமாகும். எமது தொடுதல் எனுஞ்சொல்தான் சர்மனியத்தில் deut-en என நிற்கும் என்பதும் ஒன்று. தொடுதல் எனும் உருவத்தை அப்பாலும் ஆராய்ந்துகொண்டு செல்வோமாயின், அது ஒட்டுதல் என்னும் அடியினின்று எழுந்தது எனக்காண்போம். ஒட்டுதலின் ஆதியர்த்தங்கள்=உட்செல்லல், சுருங்

குதல், பற்றிக்கொள்ளுதல் என வரும். அப்பால் ஒட்டுதலுக்கு உட்குதல் அடியாகும். உட்குதல்=உட்செல்லல். ஈற்றில் உட்குதலுக்கு அடி உள் எனும் ஆதிஉருவமாம். உள்—உட்கு—ஒட்டு—தொடு—சுட்டு—சொல்லு என இவ்வாறுகவே எமது சொல்லு எனும் உருவம் படிமுறையாய்ப் பிறந்துநிற்கின்ற விந்தையை ஆராய்ந்து காண்க. (இவையெல்லாம் எமது "சொற்பிறப்பு—ஒப்பியல் தமிழகராதி" வெளிப்படும்போது அதிக விளக்கமாகும்.)

முடிவுரை.

குடம் எனும் சொல் வளைவு எனும் குறிப்பால் கொம்பைவிளக்கி, அப்பால், கொம்புடைய மாட்டை, அவ்வினத்துள் சிறப்புமுறையாகப் பசுவைக்குறித்துநின்ற நாட்கள்போய், பசுவின் பால்கறக்கும் கலமும் குடம் (குவிந்து திரண்டது) என அறியப்படவந்தகாலத்தில், குடச்சொல் தமிழில் பசுவுக்குக்குறியீடாகநிற்கும் வழக்கு ஒழிந்தது. ஆயினும், தமிழ் அடியாய்ப்பிறந்த பிறபெரிய மொழிகளில் இன்றைக்கும் அச்சொல்லே மிகத்திரிந்து கூ, கௌ, பௌஉஸ், வோஸ் எனவும், தமிழ்ப்பாகதங்களிலேயே கோடி, ஹொண் (எருது) எனவும் வழங்குகின்றது. இனி, சுட்டிக்காட்டும் முகத்தாலேயே சொல்லெல்லாம் எழுந்தன என்பது ஒருதலையாதலால், ஆதியில் சுட்டென்றதும் சொல்லென்றதும் ஒன்றேயாம். ஆயின் சுட்டென்ற உருவம் பிற்பட்ட நாட்களில் தொட்டுக்காட்டுதலைமாத்திரம் குறிக்கத்தொடங்கியபோது அங்ஙனம் தொட்டுக்காட்டுதலின் பயனுக எழுந்த பெயரீட்டை சொல் எனும் உருவத்தினுற் குறிக்கும் வழக்கம் ஏற்பட்டது. இதனுல் "சொல்" பொதுக்குறியீடும், "சுட்டு" சிறப்புக்குறியீடும் ஆயின. இவைகளை நுண்மதியாற் கண்டுகொள்க.

ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி.

235. திருந்தா ரியந்தமிழ் தேருங் கலைசைத் தியாகர்வெற்பர்
அருந்தா ரியங்குநின் றிங்குவந் தேகு மமயத்தல்வில்
முருந்தா ரியனகை பாதமுட் டைத்தின்னன் முற்றியதேல்
மருந்தா ரியம்புவ ரென்றேபின் னேயென் மனஞ்செல்வதே. (சஉ)

காமமிக்க கழிபடர்கிளவி.

236. அன்னின்ற கண்டர் கலைசைத் தியாகருக் கன்பிலர்போல்
முன்னின் றகன்றவர் தாம்வரு நாண்மொழி யாவிடினும்
மன்னின் றதண்பெண்ணை காள்புன்னை காளென்னை மையல்கொண்டே
என்னின் றழுதியென் னீருங்கள் கேண்மை யினிதினிதே. ()

தன்னுட் கையாறெய்திடு கிளவி.

237. சொல்லரிக் காடுங் கலைசைத் தியாகர் துறைக்கடல்வாய்ப்
புல்லரி தாங்கன்னித் தாழையி னீழற் புணர்ந்தகன்ற
நல்லரிங் கேவரக் காணு விடிற்றழ னுப்பணிட்ட
வல்லரி யாவதல் லாதுய்தி யேது மடநெஞ்சமே. (கச)

தலைமகள் நெறிவிலக்குவித்தல்.

238. விழியேறு நெற்றிக் கலைசைத் தியாகர்பொன் வெற்பிற்செப்பும்
பழியேற வேறச் சுமப்பவ ராரெக்கும் பாயிருள்வாய்க்
குழியேறு மேடு தடவி வாநின்ற கொற்றவர்க்குன்
மொழியேற வேண்டு மினிநீர் வரலென்று முற்றிழையே. (கரு)

---

235. அருந் தாரி - அரிய வழி. இயல் நகை: விளி. முள் தைத்து.

236. அல் நின்ற. பெண்ணைகாள் - பனைமரங்களே. என் இன்று அழுதி என்னீர். இனிதினிது: குறிப்புமொழி.

237. அரியென்றது பதஞ்சலியையும் வியாக்கிரபாதரையும்; அரி - பாம்பு, புலி. கன்னித்தாழை - பூவாத தாழை; கன்னி - இளமையுமாம். வல்லரி - தளிர். தழனுப்பணிட்ட வல்லரி: "கையுங் காலு மோய்வன வொடுங்கித், தீயுறு தளிரி னடுங்கி, யாவது மிலையான் செயற்குரி யதுவே" (குறுந். 383). "தீயுறு தளிரின் மாநிற மழுங்க" (பெருங் 1.56 : 1!5.) உய்தி - பிழைத்தல். பி - ம். 'உய்தி நீயு மடநெஞ்சமே'

238. குழியும் மேடும் தடவி.

தலைமகன் குறிவிலக்குவித்தல்.

239. மன்னுந் தமிழ்த்தென் கலைசைத் தியாகர் மலைமடந்தாய்
மின்னுங் குருமணிச் சாரற் புனத்தில் விளைந்ததினை
இன்னும் புதல்வியை யெம்மனை காக்கவங் கேவினளென்
றுன்னுங் கருத்தருக் கெல்லி வராவகை யொன்றுரையே. (கசு)

வெறி விலக்குவித்தல்.

240. செறிபார பார முலையாய் கலைசைத் தியாகர்வெற்பர்
பிறியா மயலினை மூன்னு ளெனக்கருள் பெற்றிசற்றும்
அறியாமை யின்வரைச் சூர்கோட்பட் டாளென் றனைமுயலா
வெறியா டலைபது தீர்ப்பான் வெறியற வேண்டினளே. (கஎ)

பிறர் விலக்குவித்தல்.

241. ஆதி நடேசர் கலைசைத் தியாக ரசலத்தெண்ணில்
தூதினி தாவக் கண்டன மன்றியுஞ் சோலையின்பால்
எதிலர் மாநிதிப் பேழையொ டெய்தின ரென்னவின்றென்
காதிலு ளாழற் கோல்பாய்ந்த தொத்தது காரிகையே. (கஅ)

குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்.

242. இரவோர்க் குதவுங் கலைசைத் தியாக ரிருங்குன்றத்தோர்
கரவோ திடாமலுங் கற்பழி யாமலுங் காதலித்த
உரவோன் வரைவெதிர் கொள்ளும் படியின் றுரிமையினம்
குரவோர்க் கறிவிப்ப தெவ்வா றுரைத்தி கொடியிடையே. (ககூ)

---

239. எம்மனை - தாய்; "தீம்பா லூட்டு மெம்மனை வாராள்" (பெருங். 1. 33: 169,) விளைந்த: முற்று. விளைந்த தினையைக் காத்தற்கு. கருத்தருக்கு - தலைவருக்கு. எல்லி - இரவில்.

240. பிறியா - பிரியாத. அனை - தாய். அது தீர்ப்பான் - அந்நோயைத் தீர்க்கும்பொருட்டு. வெறி - ஆடு. வெறியாடுதலை வேண்டினள்.

241. தூது - மணம்பேச வரும் தூதுகள். நிதிப்பேழை - பொன்வைத்த பெட்டி. என்ன என்பதன் பின்னர் அது என ஒருசொல் வருவிக்க.

242. இரவோர் - வேண்டுபவர். கரவு - கள்ளம். ஓதிடாமல் - சொல்லாமல்.

௧௫. வரைவுகடாதல்.

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.

243. இச்சிக்கு மன்ன கலைசைத் தியாகரை யேத்தலர்போல்
இச்சிறு மைக்கிட மாயினை யென்னெனு மெம்மனைக்குப்
பச்சிள நொச்சியிற் பந்தரிட் டோமந்தப் பந்தர்முற்றும்
பச்சிமக் காலெடுத் தோடிற்றென் றுள்வல்லி பார்த்துக்கொள்ளே.

அலரறிவுறுத்தல்.

244. நளிசேர் மதிச்செஞ் சடையார் சிதம்பர நாதர்வைகும்
நளிசேர் வயற்றண் கலைசைவெற் பாவெங்க ளையவிக்கன்
றளிசே ரலர்தொடுத் தைம்பாற் கணிந்தவுன் னாருளால்
அளிசேர் கிலாவலர் வாயாற் றொடுப்ப ரனைவருமே. (௨)

தாயறிவுறுத்தல்.

245. மதத்தானை யீருரி யங்கியங் கத்தர் மயங்குபர
மதத்தார்க் கரியர் கலைசைத் தியாகர் வயக்கியதா
மதத்தா மிருள்போற் குழலிக்கு நீயிட்ட வாசனைமான்
மதத்தாற் களவையெல் லாமறிந் தாளன்னை மன்னவனே. (௩)

வெறியச்சுறுத்தல்.

246. களக்கந் தரசெங் கலைசைத் தியாகர்செங் கண்ணொளிபோல்
விளக்கஞ்செய் வேலன்ப நீதணி யாமையின் வேற்றுருக்கண்
டிளக்கங்கொண் டுள்ளத்தெம் மன்னையும் யாயுமென் னேந்திழைபாற்
றுளக்கஞ்செய் நோய்தணிப் பான்வெறி யாட றொடங்கினரே.

---

243. மன்ன: விளி. எனும் எம் அனைக்கு - என்று வினவிய தாய்க்கு. பச்சிமக்கால் - மேல் காற்று.

